1975 அக்டோபர் 24]

தச்சம்பட்டு கிராமத்தில் உப-மின் நிலையம்

*** 37 வினு—திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் :** மாண்புமிகு தொழில்-மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணுமலை வட்டம், தச்சம்பட்டு கிராமத்தில் மின்சார சப்-ஸ்டேஷன் (உப மின் நிலையம்) அமைக்கும் திட்டம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது முதல் செயல்பட உள்ளது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) ஆய்வில் உள்ளது.

திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் : தலைவரவர்களே, என்னுடைய பகுதியில் திருவண்ணுமலையிலிருந்து 20 மைலுக்கு மேலாக உள்ள கிராமங்களில் மின்சாரம் சப்ளை செய்து கொண்டிருக்கிருர்கள். ஆகையினுல் அங்கே ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு விவசாயியும் இரண்டு முறை, மூன்று முறை மோட்டார்காயில் தீய்ந்து விடுவதால் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிருர்கள். ஆகவே சீக்கிரமாக இதை முடிப்பதற்கு ஆவன செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, தேவைப்படும் ஆக்க சக்தியை ஆக்கப் பூர்வமாக மதிப்பிட்டு, துணை மின்நிலையம் ஏற்படுத்த அவசியம் உள்ளதா என்பதை போதிய காரணங்களுடன் விளக்கும்படி மின்வாரிய மேற்பார்வையாளர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிருர். அவருடைய அறிக்கை வந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

இறைவைக் கிணறுகளுக்கு மின் இணைப்பு

*** 38 வினு—திரு. எம். முத்தையா :** மாண்புமிகு தொழில்-மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டத்தில், வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் புதியதாக எத்தனை இறைவை கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுக்க உத்தேசிக்கப்பட்டு உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: 1975-76-ல் திருநெல்வேலி மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளாகிய நாங்குநேரி, சங்கரன்கோவில், கோவில்பட்டி, விளாத்திகுளம், தென்காசி ஆகிய இடங்களில் 1,750 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட இருக்கிறது.

திரு. எம். முத்தையா: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதிலில் வழங்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்ற சூழ்நிலை இருக்கிறதேயொழிய தற்சமயம் வரை எத்தனை இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் கேள்வியே எத்தனை கிணறுகளுக்குக் கொடுப்பதாக உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பது தான். அதனால் தான் உத்தேசமாகச் சொல்லியிருக்கிறேன். திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்த வரையிலே தமிழ் நாடு மின்சார வாரியம் திருநெல்வேலி மாவட்டத்தில் 1—2—1975 வரை 42,555 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கியிருக்கிறது. 1974-75-இல் இதுவரை 1,065 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இன்னும் 200, 300 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கக் கூடும்.

திரு. க. உரோ. எட்மண்ட்: தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் பதில் அளிக்கையில் நெல்லை மாவட்டத்தில் வறட்சியான பகுதிகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். திருச்செந்தூர் வட்டத்தில் சாத்தான்குளம், நாசரேத் போன்ற பகுதிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. மணிமுத்தாறில் தண்ணீர் வந்தால் தான் அந்தப் பகுதிகளுக்குத் தண்ணீர் கிடைக்கும். ஆனல் தண்ணீர் அங்கே வந்து சேருவதில்லை. ஆகவே, அந்தப் பகுதிகளையும் வறட்சிப் பகுதிகளாகச் சேர்த்துக் கொண்டு மின் இணைப்புக் கொடுப்பதற்கான முயற்சிகளை அரசு எடுக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இது வறட்சித் திட்டத்தில் கொடுக்கிற மின் விசையேற்றம் அல்ல. அந்தப் பகுதிகளில் எவ்வளவு மின் விசையேற்றங்களுக்கு அனுமதி கொடுக்கலாம் என்று, அந்த நிலைமைகளை அனுசரித்து இப்போது இருக்கிற அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு அனுமதி கொடுக்கப்பட்டு வருகிறது.

1975 அக்டோபர் 24]

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, இந்த வறட்சிப் பணியில் குடி தண்ணீருக்காகவும், விவசாயத்திற்காகவும் கிணறுகளை ஆழப்படுத்துவது, புதிய கிணறுகளைத் தோண்டுவது ஆகிய இந்தக் காரியங்களைச் செய்திருக்கிறார்களே, இப்பேர்ப்பட்ட இடங்களில் அவைகள் தூர்ந்து போகாமல் இருக்கவும், அவைகள் மக்களுக்கு உபயோகப்படவும், அவைகளை எனர்ஜைஸ் பண்ணவுமான ஏற்பாடுகள் உண்டா? சில இடங்களில்தானே செய்திருக்கிறார்கள். இந்த மாதிரியாக மாவட்ட வாரியாகச் செய்வதற்கு குறிப்பு உண்டாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இது வருவாய்த்துறை அமைச்சரவர்களைக் கேட்கவேண்டிய கேள்வி.

THIRU B. VENKATASWAMY: In the drought-affected areas, people are suffering a lot because of the drought conditions. May I know from the Hon. Minister—

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு குறிப்பிட்ட இடத்தில் எத்தனை கிணறுகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது என்று கேள்வி கேட்கப்பட்டுள்ளது. இப்படிக் கேட்டால் எப்படி?

THIRU B. VENKATASWAMY: Regarding drought only I am asking.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டிரௌட்டைப்பற்றி என்ன. . .

THIRU B. VENKATASWAMY: May I know from the Hon. Minister whether any special treatment will be given to the drought-affected areas in energising pumpsets?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இப்போது வறட்சி பகுதி இல்லை. ஆகவே இந்தப் பிரச்சனை எழவில்லை.

மாவட்டங்களுக்கிடையிலான பேருந்துகளில் நின்று செல்லும் பயணிகள்

* 39 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டங்களுக்கிடையே ஓடும் பேருந்துகளில் நின்று கொண்டு செல்லும் பயணிகள் அனுமதிக்கப்பட்டார்களா?